வேளாண்மைத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண்.5 – வேளாண்மை

## 2015–2016

**திரு ஆர். வைத்திலிங்கம்**
**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும்**
**வேளாண்மைத்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2015

**கொள்கை விளக்கக் குறிப்பு 2015–16**

**பொருளடக்கம்**

| பொருள் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| 1. வேளாண்மை | 4 |
| 2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் | 37 |
| 3. வேளாண்மைப் பொறியியல் | 54 |
| 4. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி | 66 |
| 5. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று | 84 |
| 6.வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | 90 |
| 7. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை | 104 |

## 7. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

**முன்னுரை**

நீர்ஆதாரங்களை பாதுகாத்து, நீர் பயன்பாட்டுத் திறனை ஊக்குவித்து பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002 ல் நிறுவப்பட்டது.

கீழ்கண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் இம்முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

- ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம்
- நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி
- மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேலும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான நிதியை வழிப்படுத்தி கொண்டு செல்வதற்கான இணைப்பு முகமையாக செயல்படுகிறது.

- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்
- நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்
- தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்
- மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டம்
- வேளாண் தகவல் சேவை வலைதளம் ‘



### 1. பிரதம மந்திரி விவசாய நீர்பாசனத் திட்டம் (PMKSY)

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம் (IWMP) தற்பொழுது மத்திய அரசின் புதிய திட்டமான **பிரதம மந்திரியின் விவசாய நீர் பாசனத் திட்டத்தின் (PMKSY)** கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்ட இனங்கள் (IWMP) நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை உகந்த அளவில் பயன்படுத்தி விவசாயிகளை அதிக அளவில் பயனடைய செய்யும் குறிக்கோளோடு நீர்வடிப்பகுதியின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

முந்தைய ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம் 26 மாவட்டங்களில் உள்ள 2763 நீர்வடிப்பகுதிகளில் கடந்த 6 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90:10 என்ற விகித அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

முந்தைய ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம் கீழ் பின்வரும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| **செயல்பாடு** | **மேற்கொள்ளப்படும் பணிகள்** |
|---|---|
| நிலமேம்பாடு | நிலம் சமன்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி அமைத்தல் |

| செயல்பாடு | மேற்கொள்ளப்படும் பணிகள் |
|---|---|
| நீர்வள மேம்பாடு | புதிய குளங்கள் / ஊருணிகள், பண்ணைக்குட்டை அமைத்தல், கசிவு நீர்க்குட்டை அமைத்தல், குளங்கள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல் |
| தாவர நடவுப்பணி | பழமரக் கன்றுகள் நடுதல், சமூக வேளாண் காடுகள் அமைத்தல், தீவனப்பயிர் மேம்பாடு, பயிர் செயல் விளக்கம் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் |
| பொதுக் கட்டமைப்பு மேம்பாடு | தடுப்பணைகள் கட்டுதல், கால்நடைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய் அமைத்தல், ஊருணி தூர் வாருதல், ஏரி மற்றும் குளம் தூர்வாருதல் |
| பண்ணை உற்பத்தி திட்டம் மற்றும் குறுந்தொழில்கள் | பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத தொழில்கள் துவங்க அதிகபட்சமாக ரூ.24000/–விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. |
| சுய உதவிக்குழு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கான வாழ்வாதாரப்பணிகள் | நீர்வடிப்பகுதியில் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டியில்லாத சுழல் நிதியும் நிலமற்ற விவசாயிகள் மற்றும் பயனாளிகள் குழுக்களுக்கு மானியமும் வழங்கப்படுகிறது. |

**2014–15** ஆம் ஆண்டில் **19** மாவட்டங்களில் **1.596** இலட்சம் எக்டர் பரப்பில் நீர்வடிப்பகுதித் திட்டங்களை ரூ.**191.62** கோடி செலவில் **5** ஆண்டுகளில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை ரூ.**166.17** கோடி நிதி மத்திய அரசாலும், ரூ.**31.39** கோடி நிதி மாநில அரசின் பங்காகவும் விடுவிக்கப்பட்டுள்ளது.



**2015–16** ஆம் ஆண்டில் இத்திட்டம் பிரதம மந்திரி விவசாய நீர் பாசனத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்படும்.

**2. நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம் :**

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் இந்த நீர்வடிப்பகுதி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தற்போது **12** நீர்வடிப்பகுதிகளுக்கு முழுமான்யத்திலும், மற்ற **142** நீர்வடிப்பகுதிகளுக்கு கடன் அடிப்படையிலும் செயல்படுத்தப்படுகிறது. இந்த **142** நீர்வடிப்பகுதிகளில், **56** நீர்வடிப்பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் நிலப்பண்படுத்துதல் பகுதியின் கீழ் பண்ணைக்குட்டை, வயல் வரப்பு அமைத்தல், வடிகால் அமைப்புகளை சரிசெய்தல், அமிழ்வு நீர்க்குட்டை அமைத்தல், வேளாண்காடு மற்றும் தோட்டக் கலை ஆகிய பணிகளுடன் பாரம்பரிய மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை புதுப்பித்தல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. பெண்கள் மற்றும் நிலமற்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்காக, மளிகை கடை கட்டுவதற்கும், சிறிய மாவு ஆலை அமைக்கவும், பூக்கள் விற்கவும், பலசரக்கு கடை அமைக்கவும் முக்கியத்துவம் தரப்படுகிறது.

**3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், நீர்வடிப்பகுதி அணுகுமுறையில், **2009–2010** ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல், மதுரை, தேனி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. **2012–2013** ஆம் ஆண்டு முதல் விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும், **2013–14** ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும்

கன்னியாகுமரி மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப் பட்டுள்ளது.

மாநில அளவில் இத்திட்டத்திற்கான நிதி, மாநில திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் மூலமாக பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட அளவில் ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2014–15** ஆம் ஆண்டில் ரூ. **22.84** கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், சுற்றுச்சூழல் மற்றும் வன , வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை, தோட்டக்கலை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், கால்நடைப் பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மேம்பாட்டு முகமை, மீன் வளம், சுற்றுலா, நகரப் பஞ்சாயத்து மற்றும் கதர் கிராமத் தொழில் ஆகிய சார்பு துறைகள் மூலமாக கிராம மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாநில அளவிலான புள்ளியியல் தகவல் மையம்**

(State Level Data Centre)

நீர்வடிப்பகுதிகளை அறிவியல் பூர்வமாக திட்டமிடவும் திறமையாக நிர்வகிக்கவும், மாநில அளவிலான புள்ளியியல் தகவல் மையம், புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்புடன் (GIS) அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து நீர்வடிப் பகுதி பணிகளையும் புவித்தகவல் தொழில்நுட்ப அமைப்பின் மூலம் கண்காணிக்கப்படுவதால் நீர்வடிப்பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்கள் இணையாமல் தவிர்க்கப்படுகிறது.

இந்த புள்ளியியல் தகவல் மையத்தில், இதுவரை **2763** நீர்வடிப்பகுதிகளை உள்ளடக்கிய **13.69** இலட்சம் எக்டர் பரப்பு



முழுமையாக மின்னணுமயமாக்கப்பட்டுள்ளது. புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்பின் மூலம் நிலஅளவு வரைபடங்கள் (Cadastral Maps) நீர்வடிப்பகுதியின் வரையறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. நீர்வடிப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிற அனைத்து மேம்பாட்டு பணிகளும் புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்பின் மூலம் குறியீடு செய்யப்பட்டு ஏற்கனவே உள்ள புவியின் செயற்கைக்கோள் படங்கள் (satellite imagery) மூலமாக ஒப்பிட்டு சரிபார்க்கப்படுகிறது. இவ்விவரங்கள் அனைத்தும் www.bhuvan.nrsc.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றப்படுகின்றன.

**ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சிறந்த செயலாக்கத்திற்கான புதுமை விருது**

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் இணையான மேலாண் தகவல் அமைப்பினை ஏற்படுத்தி, சிறந்த முறையில் திட்டப் பணிகளை பதிவு செய்தமைக்காக தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு **சிறந்த செயலாக்கத்திற்கான புதுமை விருது** **19.02.2015** அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## கோரிக்கை எண். 5 வேளாண்மைத் துறை

## 2015–2016–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2015–2016 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 6,141,99,55 | 321,18,40 | 150,50,00 | 6,613,67,95 |
| மொத்த தொகை சாட்டியது | 3 | ... | ... | 3 |

நிகரச் செலவு (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2013–14 கணக்குகள் | 2014–15 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2014–15 திருத்த மதிப்பீடு | 2015–16 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 2,38,01 | 2,62,00 | 2,58,00 | 2,58.00 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 4,335,17,71 | 4,448,33,00 | 4,788,55,76 | 5,476,30,61 |
| 2402 | மண்வள, நீர் வளப் பாதுகாப்பு | 89,11,50 | 84,24,00 | 127,98,59 | 88,30,41 |
| 2408 | உணவு சேமிப்பு – கிடங்கு வசதி | 10,40,50 | 16,44,01 | 10,69,33 | 16,44,00 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் | 285,40,51 | 287,02,89 | 300,75,55 | 303,96,79 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 114,30,82 | 112,48,99 | 126,61,50 | 124,66,42 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 21,48,79 | 48,00,01 | 191,32,18 | 73,74,50 |
| 2551 | மலைப் பகுதிகள் | 3,06,72 | 3,15,67 | 3,76,87 | 79,22 |
| 2702 | சிறுபாசனம் | 8,22,53 | 9,26,71 | 9,50,45 | 9,67,77 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | 18,54,43 | 22,59,99 | 18,74,84 | 14,02,54 |
| 2810 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 63 | 27,48,60 | 27,22,25 | 10,53,60 |
| 2852 | தொழில்கள் | 25 | ... | ... | ... |
| 3451 | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 8,62,14 | 9,74,88 | 9,11,24 | 8,90,57 |



நிகரச் செலவு (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2013–14 கணக்குகள் | 2014–15 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2014–15 திருத்த மதிப்பீடு | 2015–16 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 28,57,68 | 1,82,09 | 8,14,09 | 154,55,61 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 51,13,38 | 3,14,28 | 40,62,49 | 33,41,07 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 36,26,47 | 100,00,07 | 117,50,88 | 100,00,04 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 5,91,66 | 6,50,01 | 6,44,00 | 6,50,01 |
| 4705 | பாசனப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | 31,99,76 | 26,22,02 | 27,55,74 | 26,40,17 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 149,44,00 | 150,00,00 | 150,00,00 | 150,00,00 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | ... | 50,00 | 50,00 | 50,00 |

கோரிக்கை எண் 5 வேளாண்மைத் துறை
2015–2016 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 8,90,57 | ... | 50,00 | 9,40,57 |
| 05 02 | வேளாண்மை இயக்ககம் | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | அனுமதித்தது | 4,964,11,35 | 176,61,52 | 150,00,00 | 5,290,72,87 |
| 05 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 96,41,13 | 100,00,04 | ... | 196,41,17 |
| 05 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 39,35,07 | ... | ... | 39,35,07 |
| 05 05 | தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | அனுமதித்தது | 434,66,66 | 55,14 | ... | 435,21,80 |
| 05 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | அனுமதித்தது | 289,02,00 | 44,01,70 | ... | 333,03,70 |
| 05 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 44,93 | ... | ... | 44,93 |
| 05 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 308,45,03 | ... | ... | 308,45,03 |
| 05 09 | அங்கக சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 62,81 | ... | ... | 62,81 |
| | மொத்தம் | சாட்டியது | 3 | ... | ... | 3 |
| | | அனுமதித்தது | 6,141,99,55 | 321,18,40 | 150,50,00 | 6,613,67,95 |

**ஆர். வைத்திலிங்கம்**
**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும்**
**வேளாண்மைத்துறை அமைச்சர்**